6.3.2019-AROP 12/2018-P.W.2 ராஜேந்திரன்அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டார்.

கு.வி.2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்

நான் 31.10.2000-ல் மேலாண்மை அலுவலகராக பாலமேட்டில் பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் மேலாண்மை துறையில், அலுவலக பணி மற்றும் களப்பணியில் இருந்தேன். களப்பணியில் எந்தவிதமான பயிர்களுக்கு ஆய்வு நடத்தினேன் என்றால் எல்லா வகையிலான பயிர்களுக்கும் ஆய்வு நடத்தினேன். வேளாண்மை துறையில், தென்னை மரங்களுக்கு மதிப்பு அளிக்க எந்த பதவியில் உள்ள அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் இயக்குநருக்கு மட்டும் தான் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 2000 ல் ஓய்வு பெற்றுவிட்டேன். இன்றைய நடைமுறைகள் பற்றி எனக்கு தெரியும்.ஓய்வு பெற்று 19 வருடங்களுக்கு பின்னர் எனக்கு மதிப்பு சான்றிதழ் வழங்க அதிகாரமில்லை என்றால் சரியல்ல. அரசாங்கத் தரப்பு இழப்பீட்டிற்கு அரசாங்கத்துறையில் வேலையில் உள்ள வர்கள் மட்டும் தான் மதிப்பீடு சான்றிதழ் வழங்கமுடியும் என்றால் சரியல்ல. 2016 ம் வருடம் தென்னை மரங்களை கையப்படுததும் சமயத்தில் நான்அங்கிருந்தேன். தென்னை மரத்தின் வயது 27 சராசரியாக 45 வருடங்கள் இருக்கும். ஒரு தென்னை மரத்திற்கு சராசரியாக வருடத்திற்கு ரூ.2500/- பலன் தரும் என எப்படி நிர்ணயம் செய்தேன் என்றால் ஒரு மரத்தை 40 நாட்க-ளுக்கு ஒருமுறை தேங்காயகள் வெட்டலாம். அதன் அடிப்படையில் கொடுத்தேன். 72 மரங்களுக்கும் ஒரு வருடத்திற்கு ஒவ்வொரு மரமும் ரூ.2500/-பலன் தரும் என கூறியிருக்கிறேன். தனி தனி மரத்திற்கு கூறவில்லை என்றால் சரி. தனி தனியாக ஒவ்வொரு மடரத்திற்கு வயது குறிப்பிடவில்லை தென்னந்தோப்பில் எல்லா மரங்களும் நடப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் வயது நிர்ணயம் செய்தேன். ஒவ்வொரு மரத்திற்கும் மரத்தின் வயது மற்றும் மகசூலை பொறுத்துதான் விலை நிர்ணயம் செய்யமுடியும் என்றும் பொதுவாக நிர்ணயம் செய்யமுடியாது என்றால் சரியல்ல. அதனால் ஒரு மரத்திற்கு ரூ-30,000/- என மதிப்பீடு செய்தது தவறு என்றும் அதனால் அதனை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றால்

சரியல்ல. அது சம்பந்தமாக ஆட்சியரிடம் சாட்சியம் அளித்துள்ளீர்களா என்றால் இல்லை. நான் முதன்முறையாக தென்னைமரத்தின் மகசூல் மற்றும் விலை நிர்ணயம் பொறுத்து இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இந்த வழக்கில் இப்போது தான் சாட்சியம் அளிக்கிறேன்.

1-ம் எதிர்மனுதாரர்தரப்பில் கு.வி.

2-ம் எதிர்மனுதாரரின் கு.வி.யை மேற்கொள்கிறார்.

ம.வி. இல்லை.

ஒப்பம். ராஜேந்திரன்,

ஒப்பம். எஎஎ, முதன்மை அமர்வு நீதிபதி, மதுரை